விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 தை 9 றஜப் 5 இதழ்: 271
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 22-1-1991

வல்வெட்டித்துறையில்

## நேற்றும் எரிகுண்டு வீச்சு 100 வீடுகள் பலத்த சேதம்

(வடமராட்சி)
வல்வெட்டித்துறையில் நேற்று இரண்டாவது நாளாக இடம்பெற்ற பயங்கர விமானத்தாக்குதலில் நூற்றுக்கு மதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்றுக் காலை முதல் மாலை வரை' அவ்ரோ', பணிகள் விமானம், பொம்மர், ஹெலி போன்றவற்றிலிருந்து 78 குண்டுகள் வீசப்பட்டுன.

நேற்று இடம்பெற்ற விமானத் தாக்குதலில் சிவகுரு வித்தியாலயம், வல்லை அம்மன் (3-ம் பக்கம் பார்க்க)

## "தற்காப்பு நடவடிக்கையில் இறங்கவேண்டும்"- விடுதலைப் புலிகள்

(யாழ்ப்பாணம்)
"இன்று எதிரி எமது மக்கள் மீது ஒரு உளவியல் யுத்தத்தை ஆரம்பித்திருக்கிறான்.

இதற்கு அஞ்சி ஓடாமல் நாம் தற்காப்பு நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்" என்று (3-ம் பக்கம் பார்க்க)

கொக்குவில், சாவகச்சேரி, வலி. வடக்கில்

# பயங்கர விமானத் தாக்குதல்: ஒருவர் பலி, பலர் காயம்!

(யாழ்ப்பாணம்)
கொக்குவில், வலிகாமம் வடக்கு, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் ஹெலிகொப்டர் மற்றும் பொம்மர் விமானங்கள் நேற்று பயங்கரத் தாக்குதல் நடத்தின.

இத்தாக்குதலினால் கொக்குவிலை ஒருவர் பலியானது உடன், வீடுகள் மற்றும் பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

கொக்குவில் சந்திக்கு அண்மையில் நேற்று மாலை சிறிலங்கா விமானப் படையின் நான்கு குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் கொக்குவிலைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் எஸ் மகாதேவன் (வயது 68) பலத்த காயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலை [4ம் பக்கம் பார்க்க]

### மாதாந்தம் 7 கோடி ரூபா கப்பலில் வரும்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்ட வங்கிகளின் புழக்கத்திற்கென 7 கோடி (4-ம் பக்கம் பார்க்க)

## யுத்தம் நீண்டகாலம் நீடிக்கும்

(பக்தாத்)
வளைகுடா யுத்தம் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து



நடைபெறலாம் என்று (4ம் பக்கம் பார்க்க)

## துணுக்காய், மல்லாவியில் 35 வீடுகள் தரைமட்டம்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய், மல்லாவி ஆகிய பகுதிகளில் நேற்று காலை நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் வைத்தியசாலை, வர்த்தக நிலையங்கள், கோவில்கள், வீடுகள் என்பன பலத்தசேதமடைந்தன.

நேற்றுக் காலை 7மணி முதல் 8-45 மணிவரை 3 பொம்மர், 3 அவ்ரோ, 3 ஹெலி, 2 சிப்பிளேன், வை-12 விமானங்கள் ஒன்று சேர்ந்து நடாத்திய தாக்குதலில் 35 பொது மக்களின் வீடுகளும், 13 வர்த்தக நிலையங்களும் முற்றாகச் சேதமடைந்தன. பலர் பொது மக்கள் காயமடைந்தனர்.

மல்லாவிப் பகுதியில் நடாத் (4ம் பக்கம் பார்க்க)

புலிகளின் தொடர்ச்சியான

## போர் ஓய்வை பயன்படுத்தி இனப்பிரச்னையை தீர்க்கலாம்

(கொழும்பு)
விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான யுத்தநிறுத்த அறிவிப்பைப் பயன்படுத்தி அரசு பேச்சுவார்த்தைமூலம் இனப் பிரச்னைக்கு நல்ல தீர்வுகாண முடியும் என்று இந்தியத் தூதுவர் திரு. என். எல். ஜா கொழும்பு பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் தெரி (4-ம் பக்கம் பார்க்க)

## ★ அதிசயம் ஆனால் உண்மை பிரேத அறையிலிருந்த சடலம் உயிர் பெற்றது

(வடமராட்சி)
வைத்தியர் குழுவினரால் இறந்ததாக பிரேத அறைக்கு அனுப்பப்பட்ட சடலம் இளைஞர்களின் முதல் உதவி சிகிச்சையினால் உயிர் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா விமானப்படையினரின் தாக்குதலுக்குள்ளான வல்வையைச் சேர்ந்த சிவனேசன் வனஜா [வயது 36] என்னும் பெண் மந்திகை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்காக ஒப்படைக்கப்பட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ப. நோ. கூ. சங்கம் ஊடாக கோதுமை மா விநியோகம்

[யாழ்ப்பாணம்]
யாழ். மாவட்டத்திற்குத் தேவையான கோதுமை மா கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டு ப. நோ. கூ. சங்கங்கள் ஊடாக பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

யாழ். அரச அதிபர் கொழும்பில் உணவு ஆணை (4-ம் பக்கம் பார்க்க)

### முகமூடி அணிந்தபடி பிரசவம்!

(டெல்அவில்)
ஈராக் ஏவுகணைத் தாக்குதலுக்குப் பயந்து காற்றுப் புகமுடியாத அறைக்குள் மூன்று தினங்கள் முகமூடி அணிந்தபடி தங்கியிருந்த இஸ்ரேலியப் பெண் ஒருவர் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

தாயும், சேயும் சுகத்துடன் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். நகரில் நிர்ணய விலையில் பொருட்கள் விற்பனை

(யாழ்ப்பாணம்)
வர்த்தகர்கள் சங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் யாழ்ப்பாணத்திலுள்ள சில வர்த்தக நிலையங்களில் உணவுப் பொருள்கள் விற்கப்படுகின்றன:

மண்ணெண்ணை, சவர்க் (3-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தரன் ஸ்ருடியோ

கறுப்பு வெள்ளை படங்கள் என்லாட்ஜ்மென் படங்கள், றபர் சீல், பிளாஸ்ரிக் போட், விளம்பர போட் மற்றும் ஓவிய வேலைகள் 24, யாழ். வீதி, (ரெட்ணு வீதி), யாழ்ப்பாணம். (சி 4274)

### விற்பனைக்கு

புத்தம் புதிய அவரி 5 அந்தர் (250 kg) மேடைத்தராசு விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு தொடர்பு கொள்க. மல்லிகா கூல்பார் சந்தையடி மானிப்பாய். (சி-4277)

### நாடக நூல்கள்

O/L தமிழ் பாடத் திட்டத்தில் நாடகமும் உள்ளது. அதைக் கற்பதற்குப் பயன்படக்கூடிய இரண்டு நாடக நூல்கள். அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய செட்டிக்காரர்கள் 25/-, முதலாம் பிள்ளை 30/-, 19 வானொலி நாடகங்கள். நாடகங்கள் பற்றிய விளக்கங்கள் விமர்சனங்களும் கொண்டவை. (சி-4238)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

வேலணை கிழக்கைச் சேர்ந்த செல்வி ஆனந்தி அருணாசலம் என்பவருடைய பார்சல் [காட்போட் பெட்டி] வவுனியா – சங்குப்பிட்டிப் பாதையில் 13-01-91 ஞாயிறு பஸ்ஸிலிருந்து தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட முகவரியுடன் தொடர்புகொள்க. திரு. கோ. புவனேந்திரன், No. 66, இலுப்பையடி சந்தி, பலாலி ரோட், யாழ்ப்பாணம். [சி-4231]

### விற்பனைக்கு

மில்க்வைற் திரவ சவர்க்காரம் வீட்டுச் சலவைக்குச் சிறந்தது. அழுக்கை அகற்றும் தனிச் சக்தி வாய்ந்தது. போத்தல் ரு. 90/- மட்டுமே. மொத்தமாகவாங்குவோர்க்கு விசேட கழிவு. இணுவில், திருநெல்வேலி, யாழ். நவீன சந்தை, அண்ணாகோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற் - யாழ்ப்பாணம். (சி-1052)


## திருட்டு

[கொழும்புத்துறை]

அம்பனை பகுதிகளிலுள்ள அநேக வாழைத்தோட்டங்களில் இரவு வேளையில் அடிக்கடி வாழைக்குலைகள் திருடப்பட்டுவருகின்றன [154]

0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை, துண்டிப் பகுதிகளில் மூன்று சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளது. (154)

## கப்பலில் கொப்பிகள் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகள் 'லங்காசிறி' கப்பலில் எடுத்துவரப்படுகின்றன; இவை யாழ்ப்பாண பிரதேச கல்விப்பணிப்பாளரின் சிபார்சுக்கமைய பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களால் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. (எஸ்)

## பெண்மீது சித்திரவதை

(மட்டுநகர்)

மட்டு. கொக்கட்டிச்சோலை வெல்லாவெளி ஆகிய இடங்களில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று கூட்டாக நடத்திய இராணுவ நடவடிக்கையின்போது அம்பலாந்துறையைச் சேர்ந்த புவனம் என்ற பெண்மணி கைதுசெய்யப்பட்டு சித்திரவதையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். (வி)

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை லெனின் சனசமூக நிலை நடப்பு வருட நிர்வாகிகள் விபரம்:

தலைவர்: கி. சோதிலிங்கம், உப-தலைவர்: கா. ஜீவஸ்காந்தன், செயலாளர்: க. கருணானந்தன், உப-செயலாளர்: திருமதி சிவலோகநாயகி ஜெயலிங்கம், பொருளாளர்: இ. செல்வரத்தினம், உப-பொருளாளர்: க. சிவரூபன், போஷகர்: மு. கதிரவேலு, பொதுநல உத்தியோகத்தர்: திருமதி ஜெயமணிதேவி அகிலேஸ்வரன், கணக்குப் பரிசோதகர்; கி. தேவதாஸ்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக பதினொருபேர் தெரிவு செய்யப்பட்டனர்.

### சிறுவர் கழகம்

[யாழ்ப்பாணம்]

ஏழாலை லெனின் அறவழி சிறுவர்கழக நடப்பு வருட நிர்வாகிகள் விபரம்:

தலைவர்: செல்வன் செ. சிவகுமார், உப-தலைவர்; செல்வி தே. விஜிதா, செயலாளர்: செல்வி அ. நிறைஞ்சனு உப-செயலாளர்: செல்வி க. ஜெயந்தா, பொருளாளர்: த. பரமானந்தம், உப-பொருளாளர்: செல்வன் க. சிருபன், சிறுவர்கழக பொறுப்பாசிரியர்: செல்வி கி. தவமணி.

நிர்வாகசபை உறுப்பினர்களாக 8 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

# வளைகுடா யுத்தம்

## 5 நாளாக தொடர்கிறது

### எல்லைகளில் டாக்டர்கள்

பாக்தாத் வடக்கிலுள்ள 100 மைல் தூரத்திலுள்ள எல்லையில் 15 டாக்டர்கள் எல்லையை கடந்து செல்வதற்கு ஈரானின் அனுமதியை எதிர்பார்த்திருக்கின்றனர்.

ஈராக்கிய மக்கள் எல்லையைக் கடந்து ஈரானுக்கு செல்வதாகவும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

### இந்தியா நடுநிலைமை

வளைகுடா யுத்தம் தொடர்பாக இந்தியாவின் 5 நகரங்களில் டைம்ஸ் பத்திரிகை நடத்திய கருத்து கணிப்பில் யுத்தத்தில் இந்தியா நடுநிலைமை வகிக்க வேண்டும் என மக்கள் தீர்ப்பளித்துள்ளனர்

துருக்கியை ஈராக் தாக்கினால் ஈராக் மீது திருப்பி தாக்குதல் தொடுக்கப்படும் என்] வட அத்திலாந்திக் ஒப்பந்த [நேட்டோ] அமைப்பு எச்சரித்துள்ளன.

### துருக்கியை தாக்கினால் பதிலடி

துருக்கியை யார் தாக்கினாலும் அது நேட்டோ அமைப்பை சேர்ந்த 16 நாடுகளை தாக்குவதாகவே கொள்ளப்படும் என்று நேட்டோவின் தலைமைச் செயலர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கை தாக்க துருக்கியை ஒருதளமாக அமெரிக்கா பயன்படுத்துவதை ஓர் ஆத்திரமூட்டும் செயலாக கொள்ளக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

### பெல்ஜியம் கூட்டத்தில் முடிவு

துருக்கியிலுள்ள நேட்டோ நாடுகளின் தளத்தை அமெரிக்கா பயன்படுத்துவது குறித்து அனுமதிப்பது என்ற துருக்கி நாட்டின் முடிவு குறித்து விவாதிக்க பெல்ஜியத்தின் தலைநகர் புரூசெல்ஸில் நடைபெற்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பின்னர் மேற்படி முடிவு வெளியிடப்பட்டது.

### துருக்கியிலிருந்து போர் விமானங்கள்

இதேவேளையில் வடக்கு ஈராக்கிய இலக்குகளை தாக்குவதற்கு நேற்று துருக்கி விமான தளத்திலிருந்து அமெரிக்க ஜெட் போர் விமானங்கள் புறப்பட்டன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

### 47 பேர் படுகாயம்

இதேசமயம் நேற்று முன்தினம் ஈராக் மேற்கொண்ட இரண்டாவது ஏவுகணைத் தாக்குதலில் இஸ்ரேலில் 47 பேர் படுகாயமுற்றனர்.

### தரைப்படை மீது தாக்குதல்

இதேவேளையில் விமானத் தாக்குதலின்போது தனது கை மேலோங்கியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஈராக்கின் தரைப் படை மீது குண்டு வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் என அமெரிக்க நேச நாடுகள் அறிவித்துள்ளன.

### சோவியத் பிரசைகள்

இதேவேளையில் ஈராக்கில் தங்கியிருக்கும் அனைத்து சோவியத் பிரசைகளையும் பாதுகாப்பாக வெளியேற்றவேண்டுமென சோவியத் அதிபர் மிகேல் கொர்பச்சேவ் உத்தரவிட்டுள்ளார்.

### மொராக்கோ மன்னர் யோசனை

வளைகுடாப் போரை முடிவுக்குக் கொண்டுவர மொராக்கோ மன்னர் ஹசன் யோசனை தெரிவித்திருக்கிறார்.

### யுத்த நிறுத்தத்துக்கு ஆதரவு

யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படவேண்டும் என ஜோர்தான் மன்னர் ஹுசேன் கேட்டுள்ளார். மொரிட்டோரியஸும் சண்டை நிறுத்தத்துக்கு ஆதரவாகக் குரல் எழுப்பியுள்ளது.

### போர் நிறுத்த ஆர்ப்பாட்டம்

இதேவேளையில் ஈராக்கிற்கு எதிரான போரை உடனடியாக நிறுத்துமாறு கோரி அமெரிக்க அதிபரின் வாசஸ்தலத்திற்கு முன்னால் பெரும் எண்ணிக்கையானோர் குழுமி நின்று பெரும் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

### பல நாடுகளில் ஊர்வலங்கள்

பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஸ்பெயின், ஜேர்மனி, லிபியா போன்ற நாடுகளிலும் போர் நிறுத்தம் செய்யுமாறு கோரி பெரும் ஆர்ப்பாட்டங்களும், எதிர்ப்பு ஊர்வலங்களும் நடைபெற்றதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### 5 லட்சம் முஸ்லிம்கள் பிரார்த்தனை

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமெனக் கோரி பங்களாதேஷில் 52 நாடுகளைச் சேர்ந்த ஐந்து லட்சம் முஸ்லிம்கள் பிரார்த்தனை செய்தார்கள்.


## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் ரேட், கோண்டாவில்.

**புலமைப் பரீட்சை - 1991**

**வகுப்புகள் நடைபெறுகின்றன**

கணிதம்: திரு. நயினை, S. S. பிள்ளை

தமிழ்: திரு. சுந்தரலிங்கம்

(ஏ 991)

## SUBRA INSTITUTE SITHANKERNY

ஆண்டு 11, 10, 9 புதிய வகுப்புகள்

ஆரம்பம்: 27-01-1991 ஞாயிறு

**O/L DAY CLASS**

ஆரம்பம்: 23-01-1991 (புதன்)

காலை 9-00 மணி

ஆசிரியர் குழு :

விஞ்ஞானம் — திரு. இரா. செல்வவடிவேல்
கணிதம் — திரு. தளையரட்ணம்
தமிழ் — திரு. சின்னத்தம்பி
சமுகக்கல்வி — திரு. சண்
ஆங்கிலம் — திரு. தவபால்
வர்த்தகம் — திரு. விஜேந்திரன்

அனுபவமிக்க திறமையான ஆசிரியர் குழுவினால் போதனை நிகழ்த்தப்படும். [சி-4280]

## விலை உயர்வுக்கு

### நிலையான ஆப்பு!

ஆறுமாத கால யுத்தத்தின் மூலம், உயிருக்கு ஊசலாடித்தப்பிப் பிழைத்த தமிழ் மக்கள் வலைகுடாயுத்தம் மூண்டதுடன் வாய்வயிற்றுக் கஞ்சித் தண்ணிக்கும், ஆலாய்ப்பறக்கும் அளவுக்கு வாழ்க்கைச்செலவு உயர்வு ஆட்டிப்படைத்து விட்டது!

வாய்மூடி மௌனியாக வியாபார தில்லுமுல்லுகள் அனைத்தையும் தம்மனத்தினுள் முண்டிவிழுங்கி, நடைப்பிணமாக வாழ்ந்து வந்த மக்களுக்கு, யாழ். மாவட்ட வர்த்தகசங்கம் விடுத்துள்ள அத்தியாவசிய பொருட்களின் ''விலை நிர்ணய பட்டியல்'' பரவலான செய்தியாக மனதிற்கு பரவசமூட்டியுள்ளது!

யுத்தக்கெடுபிடி போக்குவரத்து நெருக்கடிகளின் மத்தியில் உயிரைப் பணயம் வைத்து பொருட்களை கொண்டு வரும் வர்த்தகர்களுக்குஉரிய 'லாபத்தை' உத்தரவாதம் செய்யும் அதேவேளையில், பொது மக்களுக்கு நியாயமான விலையில் பொருட்களை விற்பனைசெய்ய வகைஏற்படுத்தியுள்ளது மனமார வரவேற்கப்பட வேண்டியது.

ஊர்உலகம் இரண்டு பட்டால் கொள்ளை லாப மடிக்க நடைபாதை வியாபாரிகள் எப்படியும் வழி தேடி விடுவது இயல்பு.

இத்தகைய சூழ்நிலையில், நிரந்தர, நியாய விலை, நிர்ணயிக்கப்பட்டு, அவற்றை நீடித்து நிலை நாட்டி தட்டிக்கேட்கும் தகுதி உடையவர்கள் முன்வந்து விட்டால், ''இயற்கை, செயற்கை, தட்டுப்பாடுகள் தானாகவே உருவாக்கப்பட்டு' திரைமறைவு வர்த்தக வியாபாரம்சந்துபொந்துகளில் காளான்கள் போல முளைத்துவிடும் ஆபத்து நிறைய உண்டு.

எனவே நிர்ணய விலைகளையும், சட்ட வரம்புகளையும், இட்டுகொள்ளை லாபம் அடித்துவந்த சில்லறை வியாபாரிகள் மீது வெறும் கட்டுப்பாடுகள் மட்டும் விதித்தால் போதாது - அதனை தக்க முறையில் அமுல் நடாத்தி வழமையான பொருட்களின் விநியோகத்துக்கும், நியாயமான விலைகளின் அமுல் ஆக்கத்துக்கும், வழியேற்படுத்த வர்த்தக சங்கம் தொடர்ந்து விழிப்பாக செயற்படுவது அத்தியாவசியமாகும்!

— மயூரன்

---

நிர்ணயிக்கப்பட்ட சில்லறை விலையில்

# பொருள்களை விற்க முடியாவிடில் எவரும் கொள்முதல் செய்யக்கூடாது

## யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கம் முடிவு

(யாழ்ப்பாணம்)

பொருட்களின் விலைகள் நிர்ணயம் தொடர்பாக யாழ் மாவட்ட வர்த்தகர் சங்கம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

குடா நாட்டின் பண்டங்களின் விலை உயர்வுக்கான காரணிகளை கண்டறிவதற்காக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச வர்த்தகர்களோடு கடந்த 16ம் திகதி கலந்துரையாடல் ஒன்றை நடத்திய போது. வர்த்தகர்கள் பண்டங்களின் விலை அதிகரிப்புக்கு லொறி உரிமையாளர்கள் கொழும்பிலிருந்து பண்டங்களை கொண்டு வருவதற்கு எண்ணிரமாக இருந்த லொறிக் கூலியை ஒரு இலட்சமாகக் கூட்டியதே [இதற்குள் வரியும் அடங்குகிறது] பிரதான காரணியென தெரிவித்தார்கள். இந்த ஒரு லட்சம் ரூபா வரியுடன் சேர்ந்த கூலியை ஏற்றுக் கொண்டாலும் கூட பண்டங்களின் விலை மேற்கண்டவாறு அமைகின்றன என்று வர்த்தகர்களால் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விலையை விட அதிக விலையில் விற்ககூடாது. குறைவான விலையில் விற்கலாம் ஒரு லொறியில் 1000 கிலோ ஏற்றப்படுகிறது. ஒரு கிலோவுக்கு ரூபா 10 படி ஒருலோட்டுக்கு ஒரு லட்சம் ரூபா வருமானமாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்துலொறிகளில்ஏற்றிவரும் லொறிச் சொந்தக்காரர்கள் இங்குள்ள வர்த்தகர்களுக்கு ஒருலட்சம் ரூபா ஏற்றுக் கூலிக்கு பொருட்களை ஏற்றிக் கொடுப்பதைவிட தாமாகவே இன்னும் அதிகரித்த விலையில் சில்லறை வியாபாரிகளுக்கு இப்பொருட்களை நேரில் விற்பதில் கொண்டுள்ள பெரும் அக்கறையே கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விலைகளிலும் பார்க்க கூடுதலாக பொருட்கள் விற்கப்படுவதற்கான காரணியாகும்.

இதைவிட வவுனியாவுக்கு உள்ளே கொண்டு வரப்பட்ட பொருட்கள் பல இடங்களில் களஞ்சியப்படுவதாகவும் செயற்கையான தட்டுப்பாடு ஒன்றை ஏற்படுத்தி சிறிது சிறிதாக குடாநாட்டுக்குள் கொண்டு வந்து இரக்கமற்ற முறையில் லாபம் சம்பாதிப்பதாகவும் சிறிய வர்த்தகர்கள் முறையிட்டார்கள்.

இந்த நிலைகளை இட்டு ஆலோசனை செய்த பின்னர் வர்த்தகர்கள் பின்வரும் நடைமுறைகளை கடைப்பிடிப்பதாக முடிவு செய்துள்ளார்கள்.

எதிர்காலத்தில் பண்டங்களைக் கொள்வனவு செய்யும் போது பற்றுச்சீட்டு ஒன்றைப் பெறவேண்டும் இதில் விற்பவரை அடையாளம் காணக் கூடியதாக விபரங்களும், கொழும்பில் பொருட்களின் விலையும் தவறாது குறிப்பிட்டு இருத்தல் வேண்டும். கீழேயுள்ள அட்டவணைகளில் காட்டப்பட்டிருக்கும் சில்லறை விலைகளுக்கு பண்டம் ஒன்று விற்கப்பட முடியாத இடத்து எவரும் பண்டங்களைக் கொள்வனவு செய்யக்கூடாது.

வர்த்தக சங்கமே இந்த நடைமுறைகளைக் கட்டுப்படுத்தி, வரும் அவசியப்படும் வேளைகளில் வர்த்தக சங்கம் இப்பொருட்களின் விலைகளை மீளாய்வு செய்து விலைகளை நிர்ணயிக்கும்.

குடாநாட்டுக்குள் உள்ள வர்த்தகர்கள் இவ் அறிவித்தல்களை ஏற்றுநடந்து கொள்ள வேண்டும் எனவும் வேண்டப்படுகின்றனர். (வி)

| பொருட்கள் | | கொழும்பு விலை | ஏற்றும் கூலி | முடிவு விலை | மொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|---|---|---|---|
| மாவு | (கி) | 13-00 | 10-00 | 23-00 | 25-00 | 27-00 |
| சீனி | (கி) | 24-00 | 10-00 | 34-00 | 36-00 | 38-00 |
| ம. எண்ணெ | [லீற்] | 12-50 | 10-00 | 22-50 | 25-00 | 30-00 |
| தே. எண்ணெ | [லீற்] | 24-00 | 10-00 | 34-00 | 36-50 | 40-00 |
| சன்லைட் | | 04-75 | 01-50 | 06-25 | 07-25 | 08-25 |
| சர்க்கரை | (கி) | 24-00 | 10-00 | 34-00 | 36-00 | 38-00 |

---

### வல்வெட்டித்

(1ம் பக்க தொடர்ச்சி)

கோயில், இவன் கோயில், செபஸ்தியார் ஆலயம், நெடியகாடு மகாவித்தியாலயம் போன்றவை உட்பட பல கட்டிடங்கள் சேதமடைந்தன.

நேற்று இடம்பெற்ற குண்டுவீச்சின் போது ஸ்ரீலங்கா விமானப்படையினரால் எரிகுண்டுகளும் வீசப்பட்டன.

இவ் எரிகுண்டுத் தாக்குதலினால் இரு வீடுகள் தீப்பற்றி எரிந்தன.

வல்வெட்டி, உடுப்பிட்டி, போன்ற பகுதியிலும் நேற்று விமானத்தாக்குதல் நடத்தப்பட்டது. (51)

---

# பதுக்கலை தவிர்த்து

## மக்களுக்கு உதவுங்கள்

[கிளிநொச்சி]

போர்க்கால சூழ்நிலையைப் பயன்படுத்தி உணவுப்பொருட்களையும் எரிபொருட்களையும் பதுக்கி கள்ளச்சந்தையில்கூடிய விலையில் விற்கும் வியாபாரிகளை இனம்கண்டு விடுதலைப் புலிகளுக்கு அறிவியுங்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கோபி விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ விடுதலைப்போராட்டம் ஒருபுறம், வளைகுடாப் போரட்டம் மறுபுறம். இந்த இரண்டு போராட்டத்திற்கும் மத்தியில் பொது மக்கள் சிக்கியுள்ளனர். போராட்டத்தை சாதகமாக்கி பொருட்களை பதுக்கிவைத்துகூடுதல்விலைக்கு விற்கவேண்டாம் என்று தமிழீழ வர்த்தகர்களை வேண்டுகிறேன். வர்த்தகர்கள் அத்தியாவசியப் பொருட்களை நியாய விலையில் விற்று பொதுமக்களை பட்டினிச் சாவில் இருந்து பாதுகாக்க முன்வரவேண்டும்.

சிறுதானியங்களின் அறுவடைக்காலம் ஆரம்பித்துள்ள இவ்வேளையில் கமக்காரர்கள் தாங்கள் உற்பத்திசெய்த சிறுதானியங்களை கூடியவரை சேமித்துவைத்து உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் வேளைகளில் அவற்றை பாவிக்க முன்வரவேண்டும். கூடிய வரை இங்கு உற்பத்தியாகும் எந்தவித உணவுப்பொருட்களும் தமிழீழத்திற்குவெளியே விற்பனைசெய்ய முயற்சிக்க வேண்டாம். அப்படி செய்வதால் நாம் எதிர்காலத்தில் கஷ்டப்படவேண்டிவரும்.''

வர்த்தகர்கள் கூடியவரையில் பொருட்களை நியாய விலைக்கு விற்பனைசெய்வதுடன் தமிழீத்தில் உற்பத்தியாகும் எவ்வித உணவுப்பொருட்களையும் தமிழீழத்திற்கு வெளியே எடுத்துச்சென்று விற்பனை செய்யாதீர்கள். அப்படி செய்வது எமது மக்களுக்கும் தமிழீழத்திற்கும் நாம் செய்யும் துரோகமாகும். [83]

---

## இராசிபலன்

22-01-91

செவ்வாய்க்கிழமை

மேடம்: சிறுபிணி, தொழில் நஷ்டம், மனக்குமுறல்.

இடபம்: கடன்வரவு. மன நிறைவு. குடும்ப சுகம்.

மிதுனம்: அவமதிப்பு.காரிய வெற்றி, பயணம்.

கடகம்: பரிதவிப்பு, தொழில் தடங்கல், மனக்கவலை,

சிங்கம்: மனவேதனை, குடும்பப் பிரிவு. அலைச்சல்.

கன்னி: காரிய அனுகூலம், பணவரவு, குடும்பச் சந்தோசம்.

துலாம்: விருந்துபசாரம், இனசன உதவி, சுபகாரியம்.

விருச்சிகம்: கருத்துமோதல், வீண்பகை, தொழில் கஷ்டம்.

தனுசு: குடும்ப கவலை, பகைவர் தொல்லை, தொழில் நஸ்டம்.

மகரம்: மனைச்சிறப்பு, புதிய முதலீடு, தனவரவு.

கும்பம்: தாய்வழி கவலை, வைத்தியச்செலவு.

மீனம்: வீட்டில் குதூகலம், மனச் சந்தோசம், புகழ்.

'ஜோஸ்யர்'

---

### உணவுமுத்திரைக்கு உணவுப்பொருள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

உணவு முத்திரைக்கு 6-ம் புள்ளிகள் தொடக்கம் 10-ம் புள்ளிகள் வரை உணவுப் பொருட்கள் வழங்க உணவு ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (153)

---

### யாழ். நகரில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காரம் உட்பட பல பொருள்களை வீதிகளிலும் மற்றும் பொது இடங்களிலும் குவித்து வைத்து விற்பனை செய்தவர்களை நேற்றுக் காணமுடியவில்லை.

இந்த இடங்கள் யாவும் நேற்று வெறிச்சோடிக்காணப்பட்டன.

பொதுமக்கள் மண்ணெண்ணெ மற்றும் பொருள்களை வாங்குவதற்கு நேற்று அலைந்துதிரிந்ததை அவதானிக்க முடிந்தது.

பொருள்களுக்குக் கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்ட பின்னர் பல இடங்களில் குறிக்கப்பட்ட பொருள்கள் பதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

யாழ். நகரின் மத்தியிலும் திருநெல்வேலி பகுதிகளிலுமுள்ள இரு பலசரக்குக்கடைகளில் கட்டுப்பாட்டு விலைகளில் மண்ணெண்ணெ, தேங்காய் எண்ணெ, சீனி மற்றும் உணவுப்பொருள்களும் விற்பனை செய்யப்பட்டதினால் அக்கடைகளின் முன்பாக பொதுமக்கள் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் நீண்ட வரிசையில் நின்று பொருள்களை வாங்கினார்கள். (வி)

---

மாவீரர் நாள் ——

## 'கலை, கலாச்சார போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் தினத்தையொட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்திய கலை, கலாசாரப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் ஓவியம், கட்டுரை, சிறுகதை, கவிதை ஆகியவைகளுக்கு ஆக்கங்கள்

[4-ம் பக்கம் பார்க்க]

# வல்வையில் இறந்தோர் காயமடைந்தோர் விபரம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற விமானத் தாக்குதலில் இறந்தோர் விபரம் பின்வருமாறு:

துரை தவராசா (வயது 40) ஆதிகோவிலடி, தண்டாயுதபாணி மகேஸ் [வயது 27] குச்சம், சிங்காரம் தில்லையம்பலம் (வயது 60) ஆதிகோவிலடி, திருமேனி காஞ்சனு தேவி (வயது 24) சிவபுரவீதி, இரசேந்திரம் அறிவழகன் (வயது 21) ஆதிகோவிலடி, எஸ். சுருளி தோப்பைக்காடு காரைநகர்.

இத்தாக்குதலின்போது படுகாயமடைந்து மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டோர் விபரம்:–

ஞானகுரு சுதன் [வயது 15] வல்வை, சின்னத்துரை சிவலிங்கம் [வயது 40] சம்பரிமலை, முத்துலிங்கம் புனிதலிங்கம் [வது 31] ஆதிகோவிலடி, துரைராசா புஷ்பராசா [வயது 22] ரேவடி, சின்னப்பொடி செல்லன் [வயது 45] ஆதிகோவிலடி, காசிநாதன் குலராணி [வயது 18] சம்பரிமலை, திருமதி தங்கவேல் நவரத்தினம் [வயது 61] ஆதிகோலடி, கந்தசாமி இராஜேஸ்வரி [வயது 50] கொத்தியால், தங்கநாதன் ஜெயராணி [வயது 28) ஆதிகோவிலடி, மயூரமூர்த்தி கௌரி (வயது 16) வேம்படி, மனோற்சரமூர்த்தி பரமேஸ்வரி (வயது 54) தெளிம்பை வீரகத்திரத்தினவாசம் [வயது 21) கரவெட்டி, சிவனேசன் வனஜா (வயது 36) ஆதிகோவிலடி, சுப்பிரமணியராஜா சண்முகராஜா (வயது 47) ஊறணி, நடனசிகாமணி புவனேஸ்வரராசா (வயது 26) ஊறணி, நடனசிகாமணி புவனேஸ்வரராசா [வயது 26) வல்வைச்சந்தி, அருணானந்திசாமி செல்வமனோகரன் [வயது 18) குச்சம், இராசலிங்கம் முரசோலி (வயது 22) வேம்படி, தர்மலிங்கம் சிவாகரன் [வயது 15] வல்வைச் சந்தி, நடனசபாபதி ஞானவேல் (வயது 53) வல்வை பொன்னுச்சாமி பால சுப்பிரமணியபிள்ளை (வயது 69) அ. ம. பா. வீதி. (51)

## மாவீரர் நாள்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

வந்திருந்தபோதும், நாவல் போட்டிக்குப் போதியளவு ஆக்கங்களை எழுத்தாளர்கள் அனுப்பவில்லை. ஆறு எழுத்தாளர்களே நாவல் போட்டியில் கலந்து கொண்டனர். வந்து சேர்ந்த நாவல்களின் இலக்கியநயம், மொழி வளம், அமைப்பு முதலிய அம்சங்கள் போட்டியில் பங்குபெறும் தரத்திற்கு அமைந்திராத காரணத்தால் நாவல் போட்டிக்கு பரிசில்கள் வழங்கப்படவில்லை.

நாவல் போட்டிக்கு நடுவர்களாக எஸ். இராஜநாயகம், நா. சுப்பிரமணியஐயர், க. சொக்கலிங்கம் ஆகியோர் பணிபுரிந்துள்ளார்கள்.

போட்டி முடிவுகள் விபரம் வருமாறு;

### ஓவியம்

கீழ்ப் பிரிவு: 1. த. கமலநாதன், பருத்தித்துறை வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். 2. செல்வன் டிவகலாலா, யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் 3. நி. ஆனந்தசெளரி, 3ம் கட்டை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

மத்திய பிரிவு: 1. செ. ரஜிதா, பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய், 2. இந்திரா சண்முகராஜா, சுதுமலைதெற்கு, மானிப்பாய், றெஜி இராஜேஸ்வரன், அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, பெரிய தம்பனை, வவுனியா.

மேற்பிரிவு; 1. நி. கமலாசனி, 3ம் கட்டை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். 2. தியாகராஜா தயானந்தம், 'இலட்சுமி பவனம்', பருத்தித்துறை வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். 3. அ.மங்களா தேவ், மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.

தனியார் பிரிவு: முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அருகில், கோண்டாவில் வீதி, இருபாலை. 2. வாசுகி ஜெகநாதன், 17. கைலாசப்பிள்ளையார் கோவில் வீதி, யாழ்ப்பாணம். 3. அன்ரன் றெஜினோல்ட். அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம்.

(தொடரும்)

## மாதாந்தம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா பணம் மாதாந்தம் கப்பல் மூலம் எடுத்துவரப்படவுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

கூட்டுப்படைத் தலைமையகமும் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [153]

## ப.நோ.கூ.ச.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து கப்பல் மூலம் கோதுமை மா அனுப்ப அவர் இணங்கியுள்ளார்.

யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களுக்குக் கடன் அடிப்படையில் மேற்படி கோதுமை மா வழங்கப்படவுள்ளது. [153]

## அதிசயம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி நபரை சத்திர சிகிச்சைப் பிரிவிற்கு பொறுப்பேற்று சிகிச்சையளித்த வைத்தியக்குழுவினர் அவர் இறந்துவிட்டதாகத் தெரிவித்து பிரேத அறைக்கு அனுப்பி வைத்தனர்.

இப்பெண்ணுக்கு உயிர் இருக்கலாமெனக் கருதிய இளைஞர்கள் முதலுதவி சிகிச்சை வழங்கியதனால் மேற்படி பெண் உயிர் பெற்றுள்ளார். [51]

# ஷெல், ஹெலி தாக்குதல்

(பளை)

ஆனையிறவு முகாமிலிருந்து நேற்று முன்தினமிரவு முதல் அதிகாலையில் ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டன.

இதேவேளை இரவு 11 மணிக்கு ஹெலியிலிருந்து தொடர்ச்சியாக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

# உணவு விநியோக கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் உலர் உணவு விநியோகம் சம்பந்தமான கூட்டம் இம்மாதம் 25ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்கு யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெறவிருக்கிறது. [153]

# நீர்வேலியில் அறுவர் காயம்

[வடமராட்சி]

நீர்வேலிப் பகுதியில் நேற்று முன்தினமிரவு 11–00 மணியளவில் அவ்ரோ விமானம் நடத்திய குண்டுத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் ஆறுபேர் படுகாயமடைந்தனர். அவர்களது வீடும்பலத்த சேதமடைந்தது.

திருமதி சதாசிவம் செல்லம்மா [வயது 44], மகள் ச. ஜெயச்செல்வி (வயது 14), திருமதி குகன் நிர்மலா (வயது 28), மகன் கு. வசந்தன் (வயது5), மகள் கு. விஜயலதா(வயது9). மகன் கு. விநோ [வயது6] ஆகியோரே இச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர்களாவர். (51)

## புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

இம்மாதம் 28-ம் திகதி இலங்கை வரும், இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. சுக்லா, இலங்கை இனப்பிரச்னை சம்பந்தமாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் - அதேவேளையில் தமிழ் பேசும் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் குறித்து இலங்கை அரசிடம் வற்புறுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை-இந்திய ஒப்பந்த அடிப்படையில், இப்பிரச்னையை அணுகலாமென்றும், தேவை ஏற்படின் இலங்கை அரசுடன் நட்புறவு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் இந்தியத் தூதுவர் திரு. ஜா தெரிவித்துள்ளார்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

## யுத்தம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் நேற்று தெரிவித்துள்ளார்.

இதுவரையும் நடைபெற்ற யுத்தத்தில் ஈராக்தரைப்படையில் சிறுதொகையினரே பயன்படுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

## கொக்குவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

ஒன்பது பேர் படுகாயம் அடைந்ததுடன், கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை உமா கந்தையாவின் காலில் பலத்த காயமேற்பட்டு, கால் சுழற்றும் நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்தோர் விபரம் வருமாறு: எஸ். சண்முகநாதன் (48வயது) தாவடி, திருமதி சோ. மகாலிங்கம் (45 வயது) ஞானபண்டித வித்தியாலய ஆசிரியை, தம்பையா கண்ணன் (12 வயது), சாலிலூமன்பேட் (10 வயது) சுழாவடி, செல்வராசா (45வயது) மல்லாகம், சி. சிவசுப்பிரமணியம் (49 வயது), சிவலிங்கப் புளியடி, ஆ. ஐங்கரநேசன் (42 வயது) மானிப்பாய், திருமதி சுற்பகம் குமார் (45 வயது), திரு.க.பரமேஸ்வரன்.

நான்கு பொம்மர்களிலும் இருந்து 12 குண்டுகள் இப்பகுதியில் வீசப்பட்டன.

நவரத்தினம், இராஜரத்தினம், மகாதேவன், திருமதி மகாலிங்கம், செல்வி உமா கந்தையா ஆகியோரின் வீடுகள் உட்பட 10 வீடுகள் இச் சம்பவத்தில் சேதமடைந்தன. (135-152-153)

## வலி வடக்கில்

வலி; வடக்கில் நேற்று கடும் விமானத் தாக்குதல் இடம் பெற்றதால் பெரும் சேதங்கள் ஏற்பட்டன.

நேற்றுக் காலை 7-00 மணியளவில் 2 பொம்மர்களும் அவ்ரோ விமானமொன்றும் வலி: வடக்குப் பகுதியை வட்டமிட்டு பலத்த குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன.

பலாலி. கட்டுவன், மாவிட்டபுரம், கீரிமலை, குப்பிளான் பகுதிகளில் இக்குண்டுத் தாக்குதல்கள் இடம் பெற்றன.

ஹெலிகொப்டர்களும் பல தடவைகள் ரோந்து சுற்றி கலிபர் தாக்குதலை மேற்கொண்டன. (86)

## சாவகச்சேரியில்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்தைப்பகுதியில் நேற்றுக் காலை ஹெலிகொப்டரிலிருந்து ரொக்கெட், கலிபர் தாக்குதல்கள் நடாத்தப்பட்டது. இத்தாக்குதலில் உப்புக்கேணியை சேர்ந்த எஸ். இரத்தினம் [45 வயது] என்பவர் படுகாயமடைந்தார். ஜனனி ஸ்ருடியோ பலத்த சேதமடைந்து தீப்பற்றி எரிந்தது. சேச் லேனில் உள்ள பழைய மாவட்ட நீதிமன்ற கட்டட முன்பகுதியும் இச்சம்பவத்தில் சேதமடைந்தது.

கைதடியில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் தாக்குதலில் சுப்பிரமணியம் சிதம்பரம் (44 வயது) என்பவர் காயமடைந்தார். (107)

## துணுக்காய்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்ட தாக்குதலில் அப்பகுதியிலுள்ள வைத்தியசாலையும், கோவில் ஒன்றும், கிராம முன்னேற்றச் சங்கக் கட்டிடமும் பலத்த சேதமடைந்துள்ளன. (வி)

## தற்பாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

"எமது விடுதலைப் போராட்டம் பெரும் வளர்ச்சி அடைந்துள்ள இன்றைய நிலையில் எதிரி எம்மீது ஆதிக்கம் செலுத்துவதற்குப் பல வழிமுறைகளை மேற்கொள்கின்றான். இதில் ஒன்றுதான் தற்போது நடைபெறும் குண்டு வீச்சுக்கள்;

ஆயுதப்போராட்டத்தில் முழு நம்பிக்கை வைத்து எமது இயக்கத்துக்கு முழு உற்சாகம் தந்துகொண்டிருக்கும் எமது மக்களின் மனநிலையை விழுத்துவதற்காக எதிரி தொடுக்கும் போர் உபாயம் தான் இந்த விமானக்குண்டு வீச்சு;

எமது மக்களை அவர்களது இப்பிடங்களிலிருந்து விரட்டி விட்டு, பொருளாதாரச் சிக்கலை உண்டுபண்ணி அநாதரவான ஒரு நிலையை ஏற்படுத்தி தனக்கு அருகில் அகதிமுகாம்களில் அடைத்து பின்தன் அழிப்பு வேலையை இலகுவாகச் செய்யலாம் என்பதே எதிரியின் திட்டமாகும்.

எதிரியின் இந்தச் சதியை எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்று, வட தமிழீழம் முழுவதும் மக்கள் கூடும் இடங்களின் விமானங்கள் குண்டுகளை வீசுகின்றன. இதன் விளைவாக வடமராட்சியிலிருந்து தென்மராட்சிக்கும், தென்மராட்சியிலிருந்து வடமராட்சிக்கும் மக்கள் இடம்பெயருவதில் அர்த்தமில்லை;

எதிரிக்கு மிகவும் தேவையான யாழ். கோட்டை இராணுவ முகாமையோ, மாங்குளம் இராணுவமுகாமையோ அவனால் காப்பாற்றவோ தொடர்ந்து வைத்திருக்கவோ முடியவில்லை; அப்படிப்பட்ட நிலையில் வல்வெட்டித்துறையில் அவன் ஒரு நகர்வைச் செய்வதோ ஒரு புதிய முகாமை அமைப்பதோ இயலாத வேலை.

"எதிரியின் குண்டு வீச்சில் இருந்து தற்காத்துக்கொள்வதற்காக ஒவ்வொரு பொது மகனும் பங்குகுழி வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

மன உறுதிதான் போராட்டத்தை வெற்றிகொள்ள வைக்கும்.

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

எதிரியின் இந்த உளவியல் யுத்தத்திற்கு அடிபணியாது எமது இருப்பிடங்களை விட்டு அகலாது எதிரியின் நோக்கத்தை முறியடிப்போம்;